


**23. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று பிற்பகல் உரையாற்றுகிறார்.

2. இந்தியா அடுத்த 18 மாதங்களில் தனது சொந்த கைப்பேசி தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்விணி வைஷ்ணவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. வளர்ச்சியடைந்த பாரதம் – ஊரக வேலை உறுதி வாழ்வாதார இயக்கத்தில் திருத்தங்களை வலியுறுத்த கோரும் தமிழக அரசின் தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று நிறைவேறியது.

4. கன்னியாகுமரி மாவட்டத்தில் விரைவில் சுற்றுலா பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

5. இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 2-வது 20-20 கிரிக்கெட் போட்டி ராய்பூரில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று பிற்பகல் உரையாற்றுகிறார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில் அஇஅதிமுக, அமமுக, பா.ம.க உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில் பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் தமிழில் வெளியிட்டுள்ள செய்தியில் தேசிய ஜனநாயக கூட்டணியுடன் தமிழ்நாடு இருப்பதாகவும், திமுக அரசிற்கு விடைகொடுக்கும் தருணம் வந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் வருகையை ஒட்டி செங்கல்பட்டு மாவட்டத்தில் 7 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக திருவனந்தபுரத்தில் இன்றுகாலை பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்து பேசிய பிரதமர், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட ஒட்டுமொத்த தேசமும், ஒருங்கிணைந்து செயலாற்றுவதாக கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் நகரங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் நகர்ப்புற உள்கட்டமைப்பிற்கு கூடுதல் முதலீடுகளை மத்திய அரசு செய்துள்ளதாக குறிப்பிட்ட பிரதமர், கோடிக்கணக்கான மக்களை வங்கி அமைப்பிற்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

ஏழை, எளியோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மகளிர், மீனவர்கள் உள்ளிட்டோர் எவ்வித பிணையும் இல்லாமல் அரசு உத்தரவாதத்துடன் வங்கி கடன்களை எளிதாக பெற வகைசெய்யப் பட்டுள்ளதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் நாட்டில் 4 கோடிக்கும் மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டு ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில்,

திருவனந்தபுரம் – தாம்பரம்

நாகர்கோவில் – மங்களுரு

திருவனந்தபுரம் – ஹைதராபாத் ஆகிய 3 அம்ரித் பாரத் விரைவு ரயில் சேவையை பிரதமர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

அஸ்விணி வைஷ்ணவ்

இந்தியா அடுத்த 18 மாதங்களில் தனது சொந்த கைப்பேசி தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் என்று மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்விணி வைஷ்ணவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தில் உரையாற்றிய அவர், இந்தியாவில் சிறந்த மின்னணுவியல் சூழல் அமைப்பு நிலவுவதோடு, அலைபேசி தயாரிப்பிற்கு தேவைப்படும் எண்ணற்ற உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் திறனை எட்டியிருப்பதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

நேதாஜி

விடுதலை போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 129-வது பிறந்ததினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு,

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதா கிருஷ்ணன்,

பிரதமர் திரு. நரேந்திரமோடி ஆகியோர் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள செய்தியில் நேதாஜியின் துணிவு, தன்னம்பிக்கை, ஒற்றுமை, தேசஉணர்வு நூற்றுக்கணக்கான மக்களிடையே சுதந்திர வேள்விக்கு எழுச்சியூட்டியதாக குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில் அன்னாரது துணிச்சல், தியாகம் போன்றவை இளைய தலைமுறையினருக்கு தொடர்ந்து உத்வேகம் அளிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அச்சமற்ற தலைமைக்கும், தேச பக்திக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர் நேதாஜி என்று பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நாளைஒட்டி நாடுமுழுவதும் நேதாஜியின் வாழ்க்கை தேசபக்தியை நினைவுகூறும் வகையில் கண்காட்சிகள், நாடக நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

ஒடிஷா மற்றும் மேற்கு வங்கத்தில் நடைபெறும் பராக்கிரம தின கொண்டாட்டங்களில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் இன்று பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் ஒரு மாவட்டம் ஒரு உணவு வகை திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா நாளை தொடங்கிவைக்கிறார்.

அம்மாநில தின கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக தொழில்துறை மண்டல திட்டத்தை தொடங்கிவைக்கும் அவர், தொழில்முனைவு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் சிறப்பாக செயல்பட்ட மாவட்டங்களுக்கு விருதுகளையும் வழங்குகிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் ஆணையம்

தேர்தல் மேலாண்மை குறித்த சர்வதேச மாநாட்டின் நிறைவு நாளான இன்று புதுதில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஜியானேஸ் குமார் சிறப்புரையாற்றுகிறார்.

உலகளாவிய தேர்தல் அனுபவங்கள், புதுமைகள் உள்ளிட்டவை குறித்து பல்வேறு நாடுகளின் தூதுக்குழுக்களிடையே விரிவான ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை - முதலமைச்சர் தீர்மானம்

வளர்ச்சியடைந்த பாரதம் – ஊரக வேலை உறுதி வாழ்வாதார இயக்கத்தில் திருத்தங்களை மேற்கொள்ள மத்திய அரசை வலியுறுத்தும் தமிழக அரசின் தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று நிறைவேறியது.

இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், மாநிலங்களுக்கான ஒதுக்கீட்டினை பகிர்ந்தளிக்கும் வழிமுறையை மாநில அரசே வகுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தில் அரசின் நிதி பங்களிப்பு 40 சதவிகிதமாக உயர்த்தப்படுவதால் மாநில அரசின் நிதிச்சுமை கணிசமாக அதிகரிக்கும் என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

பழைய வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கான நிதி பங்களிப்பினை போலவே இதனை திருத்தியமைக்கவும், தேசப்பிதா மகாத்மா காந்தி பெயரிலேயே இத்திட்டத்தை தொடரவேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் கீழ் 74 லட்சம் தொழிலாளர்கள் பயனடைந்து வருவதாகவும், இதில் 80 சதவிகிதம் பேர் பெண்கள் என்றும் முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ச.பே. கேள்வி நேரம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் விரைவில் சுற்றுலா பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது பதிலளித்து பேசியஅவர், கும்பகோணத்தில் நவக்கிரக ஆன்மீக தலங்களை பொதுமக்கள் பார்வையிடவும், சென்னையில் சுற்றுலா தலங்களுக்கு வின்டேஜ் பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

ஆத்தூர் – திருப்பதி இடையே பேருந்து சேவை 2 மாநிலங்களுக்கு இடையே ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் இயக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம் உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் மண்பாண்ட தொழிற்கூடங்கள் சிறப்புடன் செயல்பட்டு வருவதாக மாநில வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் இதனைத் தெரிவித்த அவர், மண்பாண்ட தொழிலாளர்கள் மண் அள்ளுவதற்கு முறையாக மனு அளித்தால் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கேள்வி நேரத்தின் போது வெளியான மேலும் சில தகவல்கள் :

தமிழகத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டிருப்பதாகவும், ஒப்புதல் கிடைத்தவுடன் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் 4 வழிச்சாலை சந்திப்புகளில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரவுண்டானா கட்டப்பட்டு வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர் பட்டுக்கோட்டை தொகுதி மதுக்கூர் பெரமையர் கோவில் அருகே ரவுண்டானா அமைக்க ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

திருச்சி ஸ்ரீரங்கம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலையரங்கம் கட்ட பரிசீலித்து வருவதாகவும், கூடுதல் வகுப்பறைகள் ஏற்கனவே கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளதாகவும் உயர்கல்வி துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் சட்டப் பேரவையில் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்தார்.

மேட்டூர் அருள்மிகு பால தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முன்னதாக சட்டப்பேரவை இன்றுகாலை கூடியதும் ஜம்முகாஷ்மீரில் நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்த ராணுவ வீரர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

உதய நிதி

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நந்தனம் தலைமையக வளாகத்தில் மூன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்துவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

நாமக்கல் வாய்ஸ்

நாமக்கல் மாவட்டத்தில் பிரதமரின் பயிர்காப்பீடு திட்டத்தில் இதுவரை 5 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு 310 கோடி ரூபாய் பயிர்காப்பீட்டு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

திண்டுக்கல் வாய்ஸ்

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை மற்றும் வத்தலகுண்டு பகுதிகளில் செண்டு மல்லி பூக்களின் வரத்து அதிகரித்து காணப்படுவதால், விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவில் தைபூச திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

நாமக்கல் மாவட்டத்தின் 8 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பொது விநியோகத்திட்ட குறைதீர் முகாம் நாளை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி. துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆட்சித்தலைவர் திருமதி சிவ சௌந்தரவல்லி தலைமையில் இன்று நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டத்தில் வாக்காளர் தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தேனி, சேலம், காஞ்சிபுரம் மாவட்டஙகளில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெறுகிறது.

திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் பொது விநியோகத்திட்ட குறைதீர்முகாம் நாளை நடைபெறுகிறது.

மயிலாடுதுறை மாவட்டம் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான மேல்நிலைப்பள்ளியில் 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு

எழுதும் மாணாக்கர் தங்களது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடம் ஆசிபெறும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 2-வது 20-20 கிரிக்கெட் போட்டி ராய்பூரில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖